/Speed post/

அனுப்புநர்
திரு.கா.பாஸ்கரன்.,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

பெறுநர்
M/s JK Tyres & Industries,
Sriperumbudur-Tambaram Road,
Kolathur, Sriperumbudur Taluk

ந.க.30791/2012/ஆ2 நாள். 19. 9.2014

அய்யா,

பொருள் தடையின்மை சான்று - காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்பெரும்புதூர் வட்டம் - கொளத்தூர் கிராமம் புல எண்.150 மற்றும் சில மொத்த விஸ்தீரணம் 40.08.3 எக்டேர் நிலத்தில் தொழிற்சாலை அமைக்க M/s JK Tyres & Industries நிறுவனத்தினர் தடையில்லாச் சான்று கோரியது - தொடர்பாக.

பார்வை 1.M/s JK Tyres & Industries நிறுவனத்தினர் மனு நாள் 21.12.12.
2.இதர ஆவணங்கள்.

......

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், 105.கொளத்தூர் கிராமம், புல எண்.150 மற்றும் பல மொத்தப் பரப்பு 40.08.3 ஹெக்டேர்ஸ் உள்ள நன்செய் நிலங்களில் ரேடியல் டயர் பாய்ண்ட் அமைக்க திரு/ள்.ஜே.கே.டயர்ஸ் இண்டஸ்டரீஸ் என்ற நிறுவனத்தினர் தடையில்லாச் சான்று கோரியது தொடர்பாக சார்நிலை அலுவலர்களின் அறிக்கை மற்றும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது.

மேற்கண்ட புலங்களை நிறுவனத்தினர் கிரயம் பெற்று பட்டா மாற்றம் செய்யப்பட்டு நிறுவனத்தின் அனுபவத்தில் வைத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தினர் தடையில்லாச்சான்று கோரிய புலங்களில் புல எண் 172, 175, 176, 177, 178, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 189, 190, 191, 192, 193, 194, 195, 196, மற்றும் புல எண் 217 வழியாகவும், மற்றும் புல எண் 212, 215, 216, 219, 221, 222, 223, 224, 225, 226, 227, 228, 229, 230, 174, 231, 232, 233 வழியாகவும் மற்றும் புல எண் 249, 259, 260, 264, 267, 269, 270, 273, மற்றும் புல எண் 275 வழியாகவும் மேற்கிலிருந்து கிழக்காக ஏரி நீர்பாசன பூஸ்திதி வாய்க்கால் சென்று கொண்டிருந்தது என ஆவணங்களிலிருந்து தெரியவருகின்றது. தற்சமயம் பூமியில் பூஸ்திதி வாய்க்கால் தூர்க்கப்பட்டுள்ளது. புதியதாக புல எண் 150, 151, 154, 155, 156, 159, 161, 163, 166, 167, 168, 170, 171, 172, 173, 233, 234, 274, மற்றும் புல எண் 277 வழியாக கால்வாய் தோண்டப்பட்டு கம்பெனி நீரும் செல்லும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொதுப்பணித்துறையினர் தொழில் நுட்பக் கருத்துரு பெறப்படவில்லை. மேற்படி கம்பெனியில் மேற்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கத்திலிருந்து ஏரி நீர்பாசன வாய்க்கால்

தடைபடுவதாக ஏரி நீர்ப்பாசன சங்கத் தலைவர் மற்றும் கிராம பொது மக்கள் ஏற்கனவே மனு அளித்துள்ளார்கள். எனவே ஏரி நீர்பாசனம் தடையில்லாமல் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்படி நிறுவனத்தினற்கு அணுகு பாதையாக கொளத்தூர் கிராமம் புல எண்.272, 273/2, 273/3 318, 317, மற்றும் மலைப்பட்டு கிராமம் எல்லை வழியாக செல்லும் திருப்பெரும்புதூர் - தாம்பரம் நெடுஞ்சாலையில் இணைகின்றது. இதில் புல எண்.272, 273/2, 273/3 ஆகிய புலங்கள் கம்பெனி பெயரில் பட்டா தாக்கலாகாமல் வேறு நபரின் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. மேலும் புல எண்.265/1 பட்டா எண்.809 அபீப் அப்துல் லத்தீப் என்பவருக்கு சொந்தமான நிலம் கம்பெனி வளாகத்திற்குள் அமைந்துள்ளது. இதற்கு அணுகுபாதை வசதி ஏதும் செய்யப்படவில்லை.

இந்நேர்வில், மேற்படி நிறுவனத்திற்கு 2010ல் திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் ந.க.12125/2010/அ1 நாள் 31.12.2010ல் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டும், ந.105.கொளத்தூர் பஞ்சாயத்தில் தீர்மானம் எண்.3 நாள் 10.3.2011ல் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டதன்பேரிலும், Tamilnadu Industrial Guidance & Export Promotion Bureau கடிதம் EVC/JK Tyres/2010 நாள் 2.12.2010-ல் 62867.78 சதுர மீட்டருக்கு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதன்பேரிலும், ஏற்கனவே கட்டுமானப்பணி முடிவு பெற்று தொழிற்சாலை இயங்கி வருவதால், மேற்படி நிறுவனம் உரிய கட்டிட அனுமதி பெற எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-கா. பாஸ்கரன்,
மாவட்ட ஆட்சியர்.

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சியருக்காக